## III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 95

**யாத்திராகமம் 31—35 அதிகாரங்கள்**




Book - Post

பெறுநர் : திரு/திருமதி

↓↓↓

1. சேர்ப்புக் கால பண்டிகை ஆசரிக்க வேண்டிய காலம். (6)
2. ஆரோன் சிற்பக் கருவியினால் கருபிடித்து உண்டு பண்ணியது. (7)
3. ஆரோன் பார்வையில் இஸ்ரவேலர் ............ (7)
6. சாட்சிப் பலகைகள் மோசேக்குக் கொடுக்கப்பட்ட இடம். (5)
7. பெசலயேலுக்குத் துணையாக நியமிக்கப்பட்டவன். (5)
8. புளிப்பில்லா அப்பங்கள் புசிக்க வேண்டிய நாட்கள். (2)
9. அகோலியாப் .................. கோத்திரத்தான். (2)
10. தேவனுடைய விரலினால் எழுதப்பட்டவை .................. பலகைகள் (5) கடைசி இரு எழுத்துக்கள் →
14. இந்த பண்டிகையின் பலியை விடியற்காலம் வரை வைக்கக் கூடாது (3) கடைசி எழுத்து ←

→→→

1. கர்த்தரின் பார்வையில் இஸ்ரவேலர் ...................... ஜனம் (10) கடைசி எழுத்து ↓
4. கர்த்தருக்கு செலுத்தும் காணிக்கைப் பொருள்களில் இரண்டு. (2,3) கடைசி எழுத்துகள் ↓

↑↑↑

11. பெசலெயேலின் கோத்திரம், தகப்பன். (2, 2)
13. தேவ ஆவியினால் நிரப்பப்பட்டவன். (5)
14. ஓய்வுநாள் ................ (8)
16. எகிப்திலிருந்து புறப்பட்ட மாதம் (3)

←←←

5. மோசேயின் பணிவிடைக்காரன். (3) கடைசி எழுத்து ↑
12. பெசலயேல், அகோலியாப் இருவருக்கும் அருளப்பட்ட வரம். (5)
15. கர்த்தரின் பட்சத்தில் நிற்பவர்களாகக் காணப்பட்டவர்கள் .......... புத்திரர்கள். (4)



SSA

THE SPROUTED STAFF OF AARON

# ஆரோனின் துளிர்த்த கோல்

## வேதம் அறிவோம், தேவர்களாவோம்

மாத இதழ் : ஜுன் 2020

### யாத்திராகமம் 14 :13

**பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்.**

## Open my Eyes : Psalm 119 : 18

Open my eyes, so that I may behold
The wondrous things out of your law.
The sun shines in the day and sheds the golden rays,
But the one who closes the eyes cannot see.
The moon shines in the night and sheds the silver rays,
but the one who sleeps cannot see.
Both day and night your word sheds enlightenment,
but if my spiritual eyes are not opened, I cannot see you.
Lord,
open my eyes, so that I may see your wondrous things.
Amen.

**Source : Pray and serve**

**Rt. Rev. Gananabaranam Johnson**

**அன்புடையீர், வணக்கம்.**

# சர்வபூமிக்கும் தேவன்...

திரும்பும் திசையெல்லாம் திகில். பற்பல பாடங்களை படைப்பில் பிரதான படைப்பான மனிதனுக்கு பயிற்றுவித்துக் கொண்டிருக்கிறார் பரமபிதா. சமீபத்தில் கால்நடையாய் தங்கள் சொந்த ஊரை நோக்கிப் பயணித்த பலரின் பாதங்கள் வீக்கம் கண்டு, கொப்பளித்து சதையும் இரணமுமாய் காண்போரின் கண்களை குளமாக்கின.

ஆனால் எகிப்து தேசத்திலிருந்து பிரயாணம் பண்ணிய இஸ்ரவேலர்களை நாற்பது வருஷமாக வனாந்தரத்தில் ஒன்றும் குறைவுபடாதபடிக்கு, சர்வபூமிக்கும் தேவனானவர் பராமரித்து வந்தார்; அவர்கள் வஸ்திரங்கள் பழமையாய்ப் போகவுமில்லை, அவர்கள் கால்கள் வீங்கவுமில்லை. (நெகேமியா 9:21) சர்வபூமிக்கும் தேவன் தம்முடைய பிள்ளைகளை வழி நடத்தும் விதமே வித்தியாசமானது; வியப்பை அளிக்கிறது.

விந்தையானவரும் விவேகத்தின் ஊற்றான சர்வபூமிக்கும் தேவனானவர் இக்காலத்தில் நம்மிடம் எதை எதிர்ப்பார்க்கிறார்? ஆதியாகமத்தில் ஆதிமனிதர்கள் ஆரம்பத்தில் ஒரே மொழியைத்தானே பேசினார்கள். பெருமை மனிதர்களின் இருதயத்தில் இறுமாப்புடன் அமர்ந்தவுடன் பாஷை தாறுமாறாகி பாபேல் கோபுர கட்டுமானப்பணி நின்று போனது; மக்களும் சிதறிப் போயினர். சர்வபூமிக்கும் தேவனானவரைவிட மேலாக உயர நினைத்த மாத்திரத்தில் தேவனே அந்த திட்டத்தை முற்றிலும் முறிய அடித்தார்.

ஆணும் பெண்ணுமாக ஆண்டவர் ஏற்படுத்திய அழகிய குடும்ப பந்தத்தை அவலட்சணமாக்கி ஆணோடு ஆணும் பெண்ணோடு பெண்ணும் வைக்கும் உறவை ஆமோதித்த சோதோம் கொமோரா கவிழ்க்கப்பட்டு சாம்பலாகி திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டதை அறிந்தும் அப்படிப்பட்ட பந்தத்தை நியாயப்படுத்தி பெருமையாக கொண்டாடி சட்டம் ஏற்றும் அளவுக்குப் போன நாடுகளின் நிலை இன்று நம் கண்முன் நிற்கிறது.

நம் வாழ்வு நீடித்திருக்க விரும்புகிறோம் என்றால் என்ன செய்ய வேண்டும்? சர்வ பூமிக்கும் தேவனானவருக்கு பயப்படுதல் ஆயுசு நாட்களைப் பெருகப் பண்ணும் (நீதி. 10:27) நம் நாவைப் பொல்லாப்புக்கு விலக்கிக் காத்துக் கொள்வோம். தீமையை விட்டு விலகி, நன்மை செய்வோம்; சமாதானத்தைத் தேடி அதைத் தொடர்ந்து கொள்வோம். (சங். 34: 12–14, 1 பேதுரு 3:10)

சர்வபூமிக்கும் தேவனை நூறு சதவீதம் நம்பி இருப்போம். கர்த்தரை நம்பியிருக்கிற –வனையோ, கிருபை சூழ்ந்து கொள்ளும் (சங். 32:10). கிருபை என்பது ஒரு அருமையான அரண்; பெரிய பாதுகாப்பு வளையம். கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் (நீதி. 28:25) கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான் (நீதி. 29:25) சர்வ பூமிக்கும் தேவனானவரை முழுமையாக நம்பி நம்மை சாஷ்டாங்கமாக்கி அவர் பாதத்தில் சமர்ப்பிப்போம். தானியேல் நேபுகாத்நேச்சாருக்கு அளித்த ஆலோசனையை அங்கீகரித்து அப்பியாசப்படுத்தி நீடித்து வாழ்வோம். (தானியேல் 4:27)

சர்வ பூமிக்கும் தேவனே நமக்கு தீர்க்காயுசுமானவர். ஆமென்.

திருமதி. **எஸ்தர் இராபின்சன்,** சென்னை



# I. READ AND RECOGNISE : 39




Read and Recognise, வேதாகமப் புதிர்,
**வேதவினா குறுக்கெழுத்துப் போட்டிகளில்**
அனைவரும் பங்கு பெறலாம். **25.06.2020**க்குள்
விடை அனுப்பப்பட வேண்டும்.
குலுக்கல் முறையில் பரிசுகள் உண்டு.

பதில் அனுப்பப்பட வேண்டிய முகவரி :
திருமதி. **ஷர்ளி காலின்ஸ்**
120/4, சீயோன் ஆலய வளாகம்,
திருச்சி – 620 008.

**97914 09192 என்ற அலைபேசி எண்ணுக்கு கருப்பு மையில் பதிலையும் பெயரையும் தெளிவாக மத்தியில் எழுதி Whatsapp மூலம் அனுப்பலாம்.**

## Guidelines :

a. Bible Portion : John 1 & 2 Chapters

b. All answers begin with the letter "N"

c. Letters can be used any number of times.

d. Give the reference.

**Questions :**

1. ................ Philip was from Bethsaida.
2. Jesus on his part did .............. entrust himself to them.
3. The light shines in the darkness and the darkness has ................. over come it.
4. My hour has ................ yet come.
5. .............. they had been sent from the Pharisees.
6. Philip found .....................
7. The ...................... day John saw Jesus coming toward him.
8. Can anything good come out of ................?
9. There was a man sent from God, whose .............. was John.
10. Then why are you baptizing if you are ........ the Christ, ............. Eliah, ................ the prophet.

**Answers :** **I. Read and Recognise : 38** **(Luke 23 & 24)**

| | | |
|---|---|---|
| **1. Galilee 24 : 6** | **5. Galilean 23:6** | **9. God 23 : 35** |
| **2. granted 23:24** | **6. guilty 23:14** | **10. green 23:31** |
| **3. going 24:13** | **7. great 24:52** | |
| **4. give 23:2** | **8. guilt 23:22** | |

**பரிசு பெறுபவர்:**

**1.** திரு. **ரூத் வயலட் வசந்தா,** மேட்டுப்பட்டி

# II. வேதாகமப் புதிர் - 39

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| து | ந் | ல | தா | பெ | ம் | மு | ர | து | ச |
| த் | ம | ன | த | ட் | ப | டா | கி | த் | ல் |
| ரி | ஸ் | லை | ளா | டி | ஒ | ளை | த | கு | ல |
| பி | தை | ர் | யி | யி | யி | ம் | க | த் | டை |
| பொ | ன் | னி | னா | லே | தி | த் | ல | த | ஸ் |
| ண் | சு | ரு | ளி | வி | தி | ரை | தி | எ | ல |
| க | த | க | த் | டு | சீ | த் | தி | ம் | உ |
| க் | ண் | க் | ரி | ந | ப | வா | ள | டு | கு |
| தூ | த | க | சு | த் | தோ | லு | ம் | நீ | மூ |

**யாத்திராகமம் 25-28 அதிகாரங்கள்**

1. இவ்வேத பகுதியில் உள்ள 17 வார்த்தைகள் குறுக்கும் நெடுக்குமாக, வல இடமாக, மேலும் கீழுமாக இடம் பெற்றிருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து வசன இருப்பிடம் எழுதி வரிசைப்படுத்தவும்.

2. சிதறியுள்ள 26 எழுத்துக்களை ஒழுங்குப்படுத்தினால் கர்த்தர் மோசே மூலம் இஸ்ரவேலரிடம் தான் வாசம் செய்யும்படி தமக்கு எதை அமைக்கும்படி கட்டளையிட்டார் என்பது வெளிப்படும்.

## II. வேதாகமப் புதிர் - 38 விடை

**அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார் யாத்.23:25**

**கடந்த மாத வேதவினா குறுக்கெழுத்து போட்டியில் கலந்து கொண்டவர்கள் செல்வி / செல்வன்/ திருமதி / திருவாளர்.**

**I.** 1. பிரியா ஜெனிட்டா, 2. ஹெப்சி பானுமதி **II.** 1. மத்தேயு மாற்கு

**II & III.** 1. பெபல் ஜீவகி தாமஸ், 2. A.V. வர்ஜீனியா, 3. சுகந்தி ஜோன்ஸ், 4. மலர்செல்வி ரத்தினம், 5. பிரேமலதா, 6. பீட்டர் தாமஸ், 7. சாந்தி குணா, 8. கலாவதி, 9. ஃபான்சி, 10. ரூத் வயலட் வசந்தா, 11. பியூலா ஜெயபிரகாஷ், 12. சந்திரா சைமன், 13. S. தனபாக்கியம், 14. விஜயலலிதா, 15. ஜான் அரசி, 16. ஏஞ்சலின் சிந்தியா, 17. லிடியா ஜெயசீலன்

**I & III.** 1. J. சோபியா பிரேமி

**III.** 1. ராணி வில்சன், 2. பியூலா காந்தி, 3. வசந்தா செல்வராஜ், 4. T. மோனிஷா, 5. குணதிலகா யோனத்தான், 6. M. பத்மாவதி, 7. M. எலிசபெத் ராணி, 8. ஏஞ்சலின் பியூலா, 9. ஷீலா ஜான்சன், 10. பீட்டர் தாமஸ்

**I, II & III.** 1. ரூபல்லா அற்புதராஜ், 2. ஜாய் ஜோசப், 3. பிரேமா வில்சன், 4. ரெஜினாமேரி மனோகரன், 5. ரூபி காட்பரே, 6. சூசன் சுமித்ரா, 7. R. பாக்கியராணி, 8. ஜூலியா சார்லி, 9. பாலின் மார்டீன், 10. மோனிகாள் காந்திநாத், 11. பிரேமலதா தியாகராஜன், 12. ஜெயசீலி பால்ராஜ், 13. ஷாலினி இம்மானுவேல், 14. சந்திரா இம்மானுவேல், 15. M. எலிசபெத், 16. செலைன் ராணி டேவிட், 17. மார்கிரேட் எலிசபெத், 18. மனோகரி பெஞ்சமின், 19. கிரேஸ் பிராங்களின், 20. விமலா ரோசபெல், 21. ஜேனட் குணா, 22. இமல்டா சுந்தர்சிங், 23. J. மிராண்டா, 24. ஐவி கலாவதி, 25. சாந்தி ஜோயல், 26. ரபேக்காள் ஐசக், 27. D. அன்புக்கமலம், 28. மல்லிகா எட்வின், 29. ராணி தனராஜ், 30. ராணி சாந்தகுமார், 31. ரீட்டா ரோசலிண்ட், 32. கமலா பாய், 33. சலோமி எட்வின், 34. ஜெயசீலி ரவிச்சந்திரன், 35. பியூலா ஜேசுராஜன், 36. செலைன் ராணி டேவிட், 37. தேவகிருபா, 38. ரோசலின் திலகவதி





# யாத்திராகமம்

**அறிமுகம் :**

வேதாகமத்தின் இரண்டாம் புத்தகமான யாத்திராகமம் ஆதியாகமத்தின் தொடர்ச்சியாகும். யாத்திரை = பயணம்; எகிப்தில் நெருக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் அடிமை வாழ்க்கையில் உழன்ற இஸ்ரவேல் மக்களை கர்த்தர் விடுதலையாக்கி மீட்டு ஆபிரகாமுக்கு வாக்களித்த வளமான கானான் தேசம் நோக்கி பயணம் செல்வதைக் குறிக்கிறது. புது மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் இந்நூலின் பெயர் விடுதலைப்பயணம். ஆங்கிலத்தில் பெருந்திரள் கூட்டத்தின் பயணம் என்ற பொருளில் லத்தீன் மற்றும் கிரேக்க மூலங்களிலிருந்து பெறப்பட்ட புறப்படுதல் அல்லது வெளியேறுதல் என பொருள்படும் **Exodus** என அழைக்கப்படுகிறது. எபிரேயத்தில் **We' elleh Shemoth** என்று முதல் இரு எழுத்துகளிலிருந்து பெயரிடப்பட்டுள்ளது.

**ஆசிரியர், எழுதப்பட்ட காலம் :**

யூதர்களும், கிறிஸ்தவர்களும் மோசே தான் முதல் ஐந்து ஆகமங்களைத் தொகுத்தவர் / எழுதியவர் என்று காலங்காலமாக நம்புகின்றனர். 1 இரா. 6:1-ம் வசனத்தின்படி கி.மு. 966-ம் ஆண்டில் சாலொமோனின் 4-ம் வருட அரசாட்சிக்கு 480 ஆண்டுகளுக்கு முன் என்ற குறிப்பு இருப்பதால் கி.மு. 1446-ல் இப்பயணம் துவங்கியது என கருதப்படுகிறது. எனவே கி.மு. 1446 முதல் 1406 ஆண்டு வரையிலான 40 ஆண்டுகளில் பயணத்தின் போது மோசே எழுதியிருக்கிறார்.

**உட்பொருள் :**

இந்நூலில் மோசே மூலம் தேவன் தமது பெயர், தமது இயல்புகள், மீட்பின் மகிமை, மக்கள் கடைபிடிக்க வேண்டிய சட்ட திட்டங்கள், ஆராதனை நெறிமுறைகள், பண்டிகை ஆசரிப்புகள் போன்ற பல விசேஷித்த காரியங்களை வெளிப்படுத்துகிறார். சீனாய் மலையில் தேவன் மோசேயை பெயர் சொல்லி அழைத்து, தம் மக்களின் மீட்பின் திட்டத்திற்கு மத்தியஸ்தராக நியமிக்கிறார். அதே சீனாய் மலையில் மக்களோடு பயணம் செய்து வந்தபோது உடன்படிக்கையையும், லேவி கோத்திரத்தாருக்கு ஆசாரிய ஊழிய முறைமைகளையும் ஏற்படுத்தி புவியில் கடவுளுடைய இராஜ்ஜியம் நிலைநிறுத்தப்பட வழிவகை செய்ததோடு, தாம் தெரிந்து கொண்ட ஜனங்கள் மத்தியில் வாசம் செய்ய ஆசரிப்புக் கூடாரம் ஸ்தாபிக்கப்படவும், இந்த ஜனங்கள் வழியாக உலக இரட்சகராக தெரிவு செய்யப்பட்ட மத்தியஸ்தராக, பிரதான ஆசாரியராக, விடுதலை வீரராக இயேசு கிறிஸ்து விளங்குவார் என்ற நிழலான காரியங்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**நூல் அமைப்பு :**

இந்நூலை பல உட்பிரிவுகள் கொண்ட மூன்று முக்கிய பகுதிகளாக பிரிக்கலாம்.

I. அதிசய, அற்புதங்கள் புரிந்து தம் மக்களுக்கு மீட்பளித்தல் 1: 1 - 13:16

a. இஸ்ரவேல் புத்திரரின் அடிமை வாழ்க்கை

b. மோசேயின் பிறப்பு - முதல் 40 ஆண்டு காலம்

c. மோசேயின் அழைப்பு

d. விடுதலைப் பயண துவக்கம்

II. சீனாய் மலைக்கு அதிசய வழிநடத்துதல் 13:17 - 18:27

a. அற்புத வழிநடத்துதல்

b. அற்புத போஷிப்பு

c. அற்புத பாதுகாப்பு

d. மூப்பர்கள் நியமனம்

III. சீனாய் மலையில் அதிசய வெளிப்பாடுகள் 19 - 40

a. சீனாய் சேர்தல், தேவ தரிசனம்

b. பத்துக்கட்டளை

c. உடன்படிக்கை

d. தேவதூதர் பாதுகாப்பு

e. உடன்படிக்கைக்கு உடன்பாடு

f. ஆசரிப்புக் கூடாரம் - தரிசனம்

g. பொன் கன்னுக்குட்டி

h. மனந்திரும்புதல்

i. ஆசரிப்புக் கூடாரம் - அமைத்தல்

j. ஆசரிப்புக் கூடாரம் - பிரதிஷ்டை

**I. அதிசய மீட்பு 1:1 - 13-16**

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்கு அளித்த வாக்குத்தத்தின்படி (ஆதி 12:2, 17:26, 22:17, 48:4) இஸ்ரவேலர் எகிப்தியருக்கு அச்சமூட்டும் வகையில் பலுகிப் பெருகினார்கள். 66 பேராகச் சென்றவர்கள் 6 இலட்சமாக (புருஷர் மட்டும்) பெருகியிருந்தனர். இவ்வச்சத்தினால், பார்வோன் அவர்கள் மிகவும் ஒடுக்கினான். ஆனாலும் அவர்களை எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவாய் பலுகிப் பெருகினார்கள்.

அவர்களது பெருக்கத்தைக் கட்டுப்படுத்த பார்வோன் சிப்பிராள், பூவாள் என்ற தலைமை மருத்துவச்சிகள் மூலம் எபிரேய ஆண் மகவுகளைக் கொல்ல திட்டமிடுகிறான். ஆனால் இம்மருத்துவச்சிகள் தேவனுக்கு பயந்து பார்வோன் கட்டளைக்குக் கீழப்படியவில்லை. ஆதி அப்போஸ்தர்களையும் கூட யூத அதிகார வர்க்கத்தினர் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கக் கூடாது என மிரட்டியபோது சீஷர்கள் அதற்கு உடன்படியவில்லை. சபை நாளுக்கு நாள் வளர்ந்தது என பார்க்கிறோம்.



எனவேதான் திரு. இராஜாஜி அவர்கள் கிறிஸ்தவர்களை ஒடுக்கினால் அவர்கள் மூட்டைப்பூச்சி போல் பெருகுவார்கள் என கண்டு கொண்டார்.

இன்றும் நாம் தேவனுக்கு உண்மையாயும், உத்தமுமாயும் நடக்கும்போது எதிராளிகள் ஒரு வழியாய் வருவார்கள் ஏழு வழியாய் ஓடிப் போவார்கள் என்ற வாக்குத்தத்தம், விருத்தியாக்கும் தேவன் நமக்கு உண்டு போன்ற வாக்குக்களை பற்றிப் பிடித்து கடமையில் முன்னேறுவோம்.

லேவி கோத்திரத்தில் அம்ராம் மற்றும் யோகெபேத் தம்பதியருக்கு மூன்றாவது மகவாக மோசே பிறக்கின்றார். இஸ்ரவேல் மக்களது விடுதலையை எதிர்பார்த்த தாய் (எபி. 11:23) நம்பிக்கையோடு மூன்று மாதம் ஒளித்து வைத்து வளர்க்கிறாள்; பிள்ளை கட்டாயம் பிழைப்பான் என்ற நம்பிக்கையில் நாணற்பெட்டியில் கிடத்தி நைல் நதியில் விடுகிறாள். எதிர்பார்த்தபடி பார்வோனின் மகள் பெட்டியை, அதிலிருந்த குழந்தையைக் கண்டு இரக்கம் கொண்டு எபிரேயப் பிள்ளை என அறிந்தும் மகனாக ஏற்றுக் கொள்கிறாள். இச்சமயத்தில் மோசேயின் தமக்கையின் மிரியாமின் துணிவான செயல் போற்றத்தக்கது. தாய் சம்பளம் பெற்று குழந்தைக்கு பால் கொடுக்க ஏற்பாடாகிறது. தாயின் ஏக்கப் பெரு மூச்சுகள் பிற்காலத்தில் எபி. 11:24 - வசனத்தின்படி வெளிப்பட்டது என நாம் தெளியலாம். நாகரீக வளர்ச்சியில் மேன்மையடைந்த எகிப்தின் அனைத்து கலைகளிலும் மோசே தேர்ச்சி பெற்றார். அவரது குழந்தை மற்றும் வாலிபப் பருவ நிகழ்வுகளை அழகாக, விரிவாக ஸ்தேவான் உரையின் மூலம் (அப். 7:18-29) அறியலாம்.

தான் எகிப்பியனைக் கொன்றது வெளிப்பட்டது என அறிந்த மோசே தண்டனைக்குத் தப்பி மீதியான் தேசத்திற்கு ஓடுகிறார். நாம் நம் சுய அறிவை, நம் சுய ஆற்லை நம்பி பல காரியங்களைச் செய்யத் துணிகிறோம். தேவசித்தம் அறிந்து, ஒப்புக் கொடுத்து காத்திருத்தல் அவசியம் என இப்பகுதி அறிவுறுத்துகிறது.

மீதியானியர் ஆபிரகாமின் வழித்தோன்றல் ஆவர். கெத்தூராள் என்ற அவர் மனைவிக்குப் பிறந்தவர்களின் சந்ததி. (ஆதி. 25:1) இவர்கள் மேற்கு அரேபிய தேசத்தில் அக்வாபா குடாவின் கிழக்குப் பகுதியில் வசித்தார்கள். அங்கு ரெகுவேல் என்ற ஆசாரியனின் மகளான சிப்போராளை மணந்து கெர்சோம், எலியேசர் என்ற இரு புதல்வர்களுக்கு தந்தையாகிறார். மாமனது ஆடுகளை மேய்த்து மீதியான் தேசத்தில் தன் அடுத்த 40 ஆண்டுகளை நிறைவு செய்கிறார்.

அடுத்த 40 ஆண்டுகள் இஸ்ரவேல் மக்களை வனாந்திரத்தின் வழியாய் தலைமைப் பொறுப்பேற்று பொறுமையுடன், தாழ்மையுடன் வழி நடத்த கர்த்தர் மோசேயை இவ்விதம் ஆயத்தப்படுகிறார். எகிப்தில் பார்வோனது மரணநிகழ்வு இஸ்ரவேலரது வாழ்வில் திருப்புமுனையாகிறது.

- தொடரும்